



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் மூலம் நடைபெற்ற குழந்தைகள் தினவிழா நிகழ்ச்சியில், கை கழுவும் அவசியம் குறித்து காண்பிக்கப்பட்ட செயல்முறையினை பறக்கன்கால், சத்யா அம்மையார் நினைவு அரசு ஆதரவற்ற குழந்தைகள் காப்பகத்தில் (25.11.2016) அன்று பார்வையிட்டார். நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர். ராஜ்குமார் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 834/2016 நாள்: 26.11.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் மூலம், உலக கைகழுவும் தினம், அயோடின் விழிப்புணர்வு, குழந்தைகள் தினவிழா, தேசிய பெண் குழந்தைகள் பாதுகாப்பு தின நிகழ்ச்சி (25.11.2016) அன்று நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சமூக பாதுகாப்பு திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் மூலம், உலக கைகழுவும் தினம், அயோடின் விழிப்புணர்வு, குழந்தைகள் தினவிழா, தேசிய பெண் குழந்தைகள் பாதுகாப்பு தின நிகழ்ச்சி பறக்கன்கால், சத்யா அம்மையார் நினைவு அரசு ஆதரவற்ற குழந்தைகள் காப்பகத்தில் (25.11.2016) அன்று நடைபெற்றது.

குழந்தைகள் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் (கதை சொல்லுதல், பாட்டுபோட்டி) வெற்றி பெற்ற 50 குழந்தைகளுக்கு நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது. மேலும் சத்யா அம்மையார் நினைவு அரசு ஆதரவற்ற குழந்தைகள் காப்பகத்தில் உள்ள குழந்தைகளிடையே நடைபெற்ற கோலப்போட்டி, பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப்போட்டிகளில் வெற்றிபெற்ற 87 குழந்தைகளுக்கு நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது.

முன்னதாக மரு. உமாராணி அவர்கள் கைகழுவுவதால் ஏற்படும் நன்மைகள் மற்றும் எவ்வாறு கை கழுவ வேண்டும் என்பதை குறித்து செயல்முறை காண்பித்தார்கள். பின்னர் காப்பக குழந்தைகள், (குழந்தைகள் திருமணம் தடுப்பதை குறித்து) விழிப்புணர்வு நாடகம் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர்.ராஜ்குமார், மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி. பேச்சியம்மாள், காப்பக கண்காணிப்பாளர் திரு. வெங்கட்ராமன், நாகர்கோவில் நகராட்சி சுகாதார அலுவலர் திரு. வினோத் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், காப்பக குழந்தைகள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.